Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 143/2022 PW-3**

Name : நாகலட்சுமி
Father / Husband name : ஏழுமலை
Village : பாண்டிச்சேரி
Age : 55
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 08.12.2025

A1, A3 present. A2 absent. Petition u/s 317 CrPC filed and allowed. APP present.

**முதல் விசாரணை**

நான் வேலை எதுவும் செய்யவில்லை. அ.சா.1 அரிகிருஷ்ணன் எனது அண்ணன். சாட்சிகள் ஞானராஜ், கனகராஜ் ஆகியோர்களை எனக்கு தெரியாது. சுமார் 4 வருடத்திற்கு முன்னதாக ஒருநாள் நானும் எனது அண்ணன், ஓட்டுநர், அண்ணன் மகன் பிரகாஷ் ஆகியோர்கள் எனது மகளின் திருமண விசயமாக பேராவூரிலிருக்கும் எனது கொழுந்தனார் வீட்டிற்கு சென்று பேசினோம், அப்போது பிரச்சனை ஏற்பட்டது, அதுசம்ம்நதமாக திண்டிவனம் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க மேம்பாலத்தின் மேல்வந்தபோது பகல் சுமார் 12 மணியளவில் எதிரிகள் ராமு, கணேஷ், மூர்த்தி மற்றும் அவர்களுடன் 15 நபர்களுடன் வந்து எங்களின் காரை மறித்து சண்டை போட்டு என்னையும், எனது அண்ணன் மகனையும் தடியால் அடித்தார்கள், அதில் எனக்கு இடது கையில் அடிப்பட்டது. அண்ணனுக்கு உள்அடிப்பட்டது, பிரகாஷ் என்பவருக்கு உடல்முழுவதும் அடிப்பட்டது. கும்பலில் யார் என்னை அடித்தார் என்று தெரியாது. தற்போது எதிரியும் நானும் சாமாதானம் ஆகிவிட்டோம். அடிப்பட்டவுடன் நாங்கள் திண்டிவனம்அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். சம்பவம் சம்மந்தமாக நான் புகார் கொடுத்தேன். போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

**Sd/ M.Elavarasi,**
**Judicial Magistrate No.I, Tindivanam**